# வளர்தமிழ் இலக்கிய மன்றம் (2019 - 2020)

நம் கல்லூரி மாணவியரின் தமிழ் மொழி மற்றும் பொது அறிவுத் திறன்களை வெளிக்கொணரும் விதமாக வளர்தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பாகத் தமிழ்த்துறையில் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, போட்டியும் புதிரும் ஆகிய போட்டிகள் 31.8.19 மற்றும் 14.9.19 ஆகிய தேதிகளில் நடைபெற்றன.

**பேச்சுப்போட்டி** 31.8.19

கதை தோன்றக் காரணம் கூனியா? சகுனியா? என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி நடைபெற்றது. பேச்சுப் போட்டிக்கு நடுவர்களாக முதுகலை ஆங்கிலத்துறைத்தலைவர் திருமதி. அர்ச்சனா அவர்களும், முதுகலை நிதி மற்றும் கணக்குப்பதிவியல் துறைப் பேராசிரியர் திருமதி. ரேகா அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிப் பேச்சுப் போட்டியின் முடிவுகளை அறிவித்தனர். முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகளைப் பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**கவிதைப்போட்டி** : 31.8.19

மாணவியரின் கற்பனை மற்றும் கவித் திறனை வெளிப்படுத்தும் விதமாக மாரி அல்லது காரியமில்லை என்னும் தலைப்பில் கவிதைப் போட்டி நிகழ்த்தப் பெற்றது. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முதல்,இரண்டு, மூன்றாம் பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்ந்தெடுத்தனர்..

**போட்டியும் புதிரும்** 14.9.19

தமிழிலும் பொது அறிவிலும் மாணவியர்கள் கொண்ட ஆர்வத்தினை வெளிப்படுத்தும் விதமாகப் போட்டியும் புதிரும் என்னும் தலைப்பில் குழுப்போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் ஒரு குழுவிற்கு இருவர் என மொத்தம் 27 குழுவினர் கலந்து கொண்டனர். தகவலமைவுமேலாண்மைத் துறையின் உதவிப் பேராசிரியர் திருமதி. ஹரிணி அவர்கள் போட்டியினைச் சிறப்புற நடத்தி போட்டியில் முதல், இரண்டு, மூன்றாம் பரிசு பெற்ற மாணவியர்களின் பெயர்களை அறிவித்தார்.

# வளர்தமிழ் இலக்கியமன்றம் 2019 – 2020

## (சுயஉதவிப் பிரிவு)

நமது கல்லூரியின் வளர்தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பாகப் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, போட்டியும் புதிரும் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரம்

**பரிசு பெற்றவர் விபரம்**

| வ.எண் | போட்டி | நாள் | பரிசு | பெயர் |
|---|---|---|---|---|
| 1. | **பேச்சுப் போட்டி** "கதை தோன்றக் காரணம் கூனியா? சகுனியா?" | 31.08.19 | முதல் பரிசு<br>இரண்டாம் பரிசு<br>மூன்றாம் பரிசு | கிருபை I Vis.Com.<br>சுசித்ரா I BBA<br>சுகப்பிரதாயினி II BISM<br>ஆர்த்திபிரபாII B.com. Hon. |
| 2. | **கவிதைப் போட்டி** "மாரியல்லது காரியமில்லை" | 31.08.19 | முதல் பரிசு<br>இரண்டாம் பரிசு<br>மூன்றாம் பரிசு | பா. திவ்யா III B.com 'A'<br>சு. ஜெயஸ்ரீ I B.sc CN&D<br>கு. சுபிக்ஷா I NFSNMD<br>ஆ. அனீஷா II B.sc com. Sci. 'A' |
| 3. | **குழுப்போட்டி** "போட்டியும் புதிரும்" | 14.09.19 | முதல் பரிசு<br>இரண்டாம் பரிசு<br>மூன்றாம் பரிசு | சு. சௌந்தர்யா & சா. திரிநேத்ரா I B.sc. com. Sci. 'B'<br>த.சௌந்தர்யா & ச. சங்கீதப்ரியா III B.com. Hon.<br>ர. ரம்யா & தே. ராஜேஸ்வரி II B.sc Maths |



# சிறப்பு விரிவுரை – 1

எமது கல்லூரியின் சுயஉதவிப் பிரிவுத் தமிழ்த் துறையின் சார்பாக வளர்தமிழ் இலக்கிய மன்றம் 2019-20 ஆம் ஆண்டிற்கான சிறப்பு விரிவுரை 27.06.19 வியாழக் கிழமை அன்று நடைபெற்றது. ஆஸ்திரேலியா, சிட்னி தமிழ்க் கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் திருமிகு முனைவர் **ரத்தினம் மகேந்திரன்** அவர்கள் '**சிலம்பும் இளங்கோவும்**' என்னும் தலைப்பில் சிறப்பு விரிவுரையாற்றினார். அதில் அவர் சிலப்பதிகாரத்திற்கும் இளங்கோவடிகளுக்கும் கழகம், மன்றம் போன்றவற்றை மாணவர்கள் முனைந்து தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் பண்டைக் காலத் தமிழ்க் கலாச்சாரம் பண்பாடு ஆகியன சிலப்பதிகாரத்தில் அதிக இடங்களில் பேசப்பட்டிருப்பதால் மாணவர்கள் அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வில் சிறப்பானதொரு இலக்கை அடையமுடியும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.



சிறப்பு விரிவுரை -1 : முனைவர் **ரத்தினம் மகேந்திரன** சிட்னி தமிழ்க் கலை இலக்கிய மன்றத்தின் தலைவர், ஆஸ்திரேலியா - 27.06.19

# சிறப்பு விரிவுரை - 2

தமிழ்த்துறை சுயஉதவிப் பிரிவின் வளர்தமிழ் இலக்கிய மன்றம் 2019 - 2020 ஆண்டுக்கான சிறப்பு விரிவுரை பிப்ரவரி மாதம் 26-ஆம் நாள் ‘தமிழில் பிழையின்றிப் பேசுவோம் எழுதுவோம்’ என்னும் தலைப்பில் நடைபெற்றது. இதில் பேராசிரியர் முனைவர் விஜயலட்சுமி ராமசாமி (பணிநிறைவு, ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி, சென்னை - 600 086) அவர்கள் தமிழைப் பிழையின்றி உச்சரிக்க, நாப் பயிற்சியும் தெளிவும் தேவை என்றும் எழுதுவதற்கு எழுத்துப் பயிற்சியும், கருத்துச் செறிவும் தேவை என்றும் மாணவர்களுக்குப் பயனுள்ள வகையில் பயிற்றுவித்துச் சிறப்புரையாற்றினார். கடுஞ்சொற்களை உச்சரிக்க நாப் பிறழ்ச்சிப் பயிற்சி கொடுத்து அவர்களைத் திரும்பத் திரும்பக் கூற வைத்துப் பிழையின்றிப் பேசவும் பயிற்றுவித்தார். இந்தப் பயிற்சி மாணவர்களால் மிகவும் வரவேற்கப்பட்டு ஆர்வத்துடனும், ஆசையுடனும் அவர்கள் கொடுத்த பயிற்சியைச் செய்துபார்த்துப் பயனடைந்தனர்.






# கவிதைப் பாசறை

ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி தமிழ்த்துறை சுய உதவிப் பிரிவின் வளர்தமிழ் இலக்கிய மன்றம் சார்பாக, மாணவர்களின் கவிதை எழுதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் 30.9.2019 அன்று கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி இர. கீதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மொழித்துறைகளின் தலைவர் முனைவர் திருமதி சு. இலட்சுமி அவர்களின் வரவேற்புரையுடன் விழா இனிதே தொடங்கியது. இதில் சாகித்ய அகாதமி மற்றும் நம்பிக்கை நட்சத்திரம் விருதாளர் கவிஞர் மனுஷி அவர்களும், எழுத்தாளர் கட்டுரையாளார் மக்கள் தொலைக்காட்சி ஆலோசகருமான கவிஞர் ஜெயபாஸ்கரன் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசைக் கல்லூரி முதல்வர் அவர்கள் வழங்கினார். கவிஞர் மனுஷி ‘‘கவிதைக்கு மொழி இன்றியமையாதது என்றும் அவரவர் உணர்வுகளை அவரவர் வெளிப்படுத்துவதுதான் சிறந்த படைப்பு’’ என்றும் சிறப்புரை ஆற்றினார். கவிஞர் ஜெயபாஸ்கரன் மரபுக்கவிதைகள், பாடல் புனையும் முறை அதற்கான அமைப்புகள், களங்கள் குறித்துத் தெளிவாக விளக்கினார். இந்நிகழ்ச்சியில் 17-க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர். கவிஞர் மனுஷி அவர்கள், மாணவர்களுக்குக் கவி எழுதும் ஆர்வத்தையூட்டி அதனைப் படைக்கும் முறைமைகளையும் பயிற்றுவித்தார். அதனைத் தொடர்ந்து அடையாளம் என்ற தலைப்பில் அமைந்த கவிதைப் போட்டியில் அறுபது மாணவர்கள் கலந்துகொண்டனர். அதில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மாணவர் மு. விக்னேஷ்குமார் முதல் பரிசையும், காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி மாணவி ச.சினேகா இரண்டாம் பரிசையும், அம்பத்தூர் சோகா இகேதா கல்லூரி மாணவி பெ. சாந்தி மூன்றாம் பரிசையும் பெற்றனர். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் திருமதி கோ. பத்மவிலாசினி அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே நிறைவடைந்தது.





# வாகை நாடக மன்றம்

## (சுயஉதவிப் பிரிவு)

2019-2020 ஆம் கல்வியாண்டில் இயலுக்குச் சிறப்பு விரிவுரைகளையும் இசைக்குக் கவிதைப் பாசறையையும் நடத்தித் தமிழுக்கு அணி சேர்த்த தமிழ்த்துறை(சுயஉதவிப்பிரிவு) 29.02.2020 (சனிக்கிழமை) அன்று நாடகத் தமிழுக்கும் விழா எடுத்துச் சிறப்பித்தது. கல்லூரிச் சிற்றரங்கில் நடைபெற்ற நாடகவிழாவில் நாடக மன்றப் பெயர் அறிமுகமும் பல்துறை மாணவியருக்கிடையேயான நாடகப் போட்டியும் நடைபெற்றன.

இவ்விழாவில் இக்கல்லூரித் தமிழ்த்துறையின் (சுயஉதவிப்பிரிவு) மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **சுந்தரிபட்டாபிராமன்** தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு நாடக மன்றத்திற்கு ‘‘**வாகை**’’ என்ற பெயரை அறிமுகம் செய்து வைத்து நாடகம் குறித்து உரையாற்றியதோடு அத்துறையில் வெற்றி வாகை சூட வேண்டும் என்று மாணவியரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் தலைமையுரையாற்றி வாழ்த்திப் பேசினார்.

சிறப்பு விருந்தினராகக் கதையாசிரியர் நாடக நடிகரான **ஸ்ரீ ரமேஷ்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாணவியரின் நடிப்புத் திறனைப் பாராட்டியதோடு அவர்கள், தங்களை நடிப்பில் மேம்படுத்திக்கொள்ள நல் ஆலோசனைகளையும் வழங்கினார். ஜனவரி மாதம் நம் கல்லூரி பல்துறை மாணவியர்க்கு இடையேயான நாடகப் போட்டியின் தகுதிச்சுற்றில் வெற்றிபெற்ற ஏழு துறையைச் சார்ந்த மாணவியர் காப்பிய, புராண, இதிகாசக் கதைகளை நாடகமாக நடிக்க, விருந்தினர் இருவரும் நடுவர்களாக இருந்து முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளுக்கான மாணவியரைத் தேர்ந்தெடுத்தனர். வெற்றிபெற்ற மாணவியர்க்குப் பரிசுக்கோப்பைகளும், பங்கு பெற்ற அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன. இவ்விழாவில் காலை மற்றும் சுயஉதவிப் பிரிவின் துணை முதல்வர்கள், மொழித்துறைத் தலைவர், தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் நாடக மன்றத்தின் உறுப்பினரான 300-க்கும் மேற்பட்ட மாணவியர் கலந்துகொண்டனர்.



வாகை நாடக மன்றம் : **பெயர் அறிமுக விழா** - 29.2.2020 தலைமை விருந்தினர் - மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **சுந்தரி பட்டாபிராமன்**, நாடக நடிகர் **ஸ்ரீ ரமேஷ்**

https://www.youtube.com/watch?v=Wo3NbwynZo0&t=9s

# பயிலரங்கம்

தமிழ்த்துறை சுயஉதவிப் பிரிவின் இலக்கிய மன்றமும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திருமூலர் ஆய்வு இருக்கையும் இணைந்து நடத்திய '**திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்**' என்னும் தலைப்பிலான ஒரு நாள் பயிலரங்கம் 05.03.2020 அன்று நடைபெற்றது. இதில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமதி V. உமாசங்கரி அவர்கள் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் உரையாற்றும்போது மனித வாழ்க்கைக்குத் தேவையான வாழ்வியல் முறை தியானப்பயிற்சி, உடற்பயிற்சி, மனதை ஒருநிலையில் இயங்க வைக்கும் மனப்பயிற்சி மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை ஆற்ற வேண்டிய கடமைகள் அறிவியல், விஞ்ஞானம், ஆன்மிகம் குறித்த செய்திகள் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ள விதம் குறித்துப் பேசினார்.

மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தியானப்பயிற்சி, உடற்பயிற்சி ஆகியவற்றைக் குறிப்பிடும் போது இப்பயிற்சிகளால் நினைவாற்றல் பெருகுவதோடு மன உறுதியும் ஏற்படும் என்றார். அத்துடன் மாணவியருக்குத் தியானப்பயிற்சி கொடுத்ததும் அவர்கள் அப்பயிற்சிகளை ஈடுபாட்டுடன் செய்து பழகினர். மனவளக்கலை குறித்த சந்தேகங்களை மாணவியர் கேட்க அதற்கு அவர் தெளிவாகவும், விளக்கமாகவும், சுருக்கமாகவும் விடையளித்தார். இதனால் இந்நிகழ்ச்சி மாணவியர்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றது. இந்நிகழ்ச்சியின் இறுதியில் பயிலரங்கில் கலந்து கொண்டு பயன்பெற்ற மாணவியருக்குத் தமிழ்த்துறை சார்பாகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தமிழ்ப்பண் இசைக்க விழா இனிதே நிறைவடைந்தது.







பயிலரங்கம் : **‘திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்’** – 05.03.2020 திருமதி V. உமாசங்கரி, உயர்நீதிமன்ற வழக்கறிஞர், சென்னை